**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 33/2021**
**நாள்.20.07.2026**
**பி.வா.சா.1- கோவிந்தராஜ்**
**த/பெ - சுப்புராஜ்**

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் புதுப்பட்டியில் 2020ம் ஆண்டில் நிலம் வாங்கியதில் இருந்து அங்கு குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு நிலக்கோட்டை தாலுகா, குல்லலக்குண்டு கிராமம், பொட்டிசெட்டிபட்டியில் குடியிருந்தேன்.

2. வாதி மேற்படி புதுப்பட்டியில் 3 தலைமுறைகளாக குடியிருந்துவருகிறார் என்றால் சரிதான்.

3. காணப்பாடி கிராமம் சர்வே எண்.294 யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு பாத்தியப்ட்டது. சர்வே எண்.293/7 யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் நடராஜனுக்கு பாத்தியப்பட்டது, மேற்படி சர்வே எண்ணின் தெற்குபக்கத்தில் கிழமேல் 204 அடியும் தென்வடல் 10 அடியும்,அமிர்தம் மற்றும் நடராஜனுக்கு பாத்தியப்பட்ட பொதுப்பாதை உள்ளது. மேற்படி பொதுப்பாதை என்று சொல்லப்படும் பாதைக்கு அமிர்தம் பெயரில் பாத்தியம் இருப்பதற்கு ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன், வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது.

4. ஆதியில் சர்வே எண்.293,294,295 ஆகியவை வெள்ளையன் செட்டியார் மற்றும் பெருமாள் செட்டியார் ஆகிய உடன்பிறந்த சகோதரர்களுக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

5. சர்வே எண்.294, 293/7 ஆகியவை வெள்ளையன் செட்டியாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். அவருடைய இறப்பிற்கு பின்பு கரவன்ராயன்செட்டியாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான்.

6. சர்வே எண்.294 க்கு கட்டுப்பட்ட இடத்தை 1968ம் ஆண்டு சௌந்தரபாண்டிய நாடார் கரவன்ராயன்செட்டியாரிடமிருந்து கிரையம் பெற்றார்

என்றால் சரிதான்.

7. சர்வே எண்.293/7 க்கு கட்டுப்பட்ட இடத்தை 1984ம் ஆண்டு பெரியசாமிபிள்ளை கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.

8. சர்வே எண்.294, 293/7 ஆகியவை ஒரே முன்பாத்தியஸ்தரிடம் இருந்தது என்றால் சரிதான். மேற்படி சங்கதிகளை பொறுத்து நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான்.

9. காணப்பாடி கிராமம் சர்வே எண்.293/7 க்கு கட்டுப்பட்ட இடத்தை பெரியசாமிபிள்ளையிடமிருந்து வாதி 1991ம் ஆண்டு கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.

10. காணப்பாடி கிராமம் சர்வே எண்.293 ன் இதர உட்பிரிவுகளான 293/3, 293/4பி, 293/8 ஆகிய சர்வே எண்களில் கட்டுப்பட்ட சொத்தை வாதி பெருமாள் செட்டியாரின் மகன் ராமலிங்கம் செட்டியாரின் வாரிசுகளிடமிருந்து 2003ம் ஆண்டு கிரையம் பெற்றார் என்றால் சரிதான், அப்போது நான் புதுப்பட்டியில் குடியிருக்கவில்லை.

11. வாதி வெள்ளையன்செட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும், பெருமாள்செட்டியாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

12. சர்வே எண்.293/7, 294 ஆகியவையும் மேற்படி சர்வே எண்களுக்கு தொடர்பான உட்பிரிவு சர்வே எண்களுக்கு கட்டுப்பட்ட சொத்துக்களும் காணப்பாடி கிராமத்திற்கு உட்பட்டவை என்றால் சரிதான்.

13. நான் கிரையம் பெற்ற சர்வே எண்.294க்கு கட்டுப்பட்ட சொத்துக்களை சௌந்தரபாண்டியநாடார் வாரிசான தேவராஜ் நாடார் மற்றும் அவரது வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

14. 17.12.2020ம் தேதி நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். தாக்கல் செய்தாரா என்று தெரியாது. மேற்படி ஆவணத்திற்கான தாய்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா

என்றால் எல்லா ஆவணங்களையும் வழக்கறிஞரிடம் கொடுத்தேன்.

15. 10.02.2021ம் தேதி நிலத்தை அளப்பதற்கு படி கட்டிய பின்பு 23.02.2021ம் தேதி இடத்தை சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் வந்து அளவீடு செய்தார்கள். JCP இயந்திரத்தின் துணை கொண்டு இடத்தை அளவீடு செய்தோம் என்றால் சரிதான். மேற்படி அளவீட்டின்போது வாதிக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.293ல் உள்ள அத்துமால்களையும், பயிர்களையும் பிடுங்கிவிட்டோம் என்றால் சரியல்ல, என் நிலத்திற்குள் இருந்த பயிர்களை தான் பிடுங்கினோம். எல்லைக்கற்களையும் சேதப்படுத்தி பிடுங்கிவிட்டு வேறு கற்களை நட்டோம் என்றால் சரியல்ல.

16. இது சம்பந்தமாக வாதி தரப்பில் வடமதுரை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவிற்கான CSR.No.77/21 என்றால் எனக்கு தெரியாது.

17. இதுபோன்ற காரியங்களை நான் தொடர்ந்து செய்துவந்ததால் என் மீது 2021, 2022 ஆகிய ஆண்டுகளில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் 2 முறை புகார் கொடுக்கப்பட்டது. தேதி தெரியவில்லை. அது சம்பந்தமாக வா.சா.ஆ.11 மற்றும் 12 CSR.No.352/21, 442/2022 முறையே கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டுள்ளது, அதுபற்றி எனக்கு தெரியாது.

18. சட்டத்திற்கு விரோதமாக மேற்கொள்ளப்பட்ட நில அளவீடு சம்பந்தமாக நில அளவையர், மாவட்ட துணை இயக்குனர் புகார் தெரிவிக்கப்பட்டதா என்றால் தெரியாது. மேற்படி புகாரின் அடிப்படையில் மாவட்ட துணை இயக்குனரின் உத்தரவின் பேரில், வருவாய் ஆய்வாளர், தலைமை நில அளவையர், கிராம உதவியாளர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் நேரில் வந்து பார்வையிட்டார்கள் என்றால் வந்தது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை. என் குடும்பத்தார் மேற்படி அதிகாரிகள் பார்வையிடும்போது உடனிருந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி அதிகாரிகள் சம்பவயிட்டது உண்மை என்று ஊர்ஜிதபடுத்தினார்கள் என்றால் எனக்கு தெரியாது, கடிதம் எதுவும் வரவில்லை.

19. ஊர்ஜிதபடுத்தப்பட்டபின்பு திண்டுக்கல் மாவட்ட நில அளவை துணை இயக்குநர் மறு நில அளவைக்கு உத்தரவு பிறப்பித்தார் என்றால் எனக்கு தெரியாது. அதுசம்பந்தமாக எனக்கு எந்த கடிதமும் வரவில்லை. தற்போது வரை மறுஅளவீடு செய்யவில்லை என்றால் சரிதான், செய்திருந்தால் நான் வேலி போட்டிருப்பேன்.

20. மேற்படி சம்பவத்திற்கு பின்பு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

21. இவ்வழக்கின் அழைப்பாணையை நான் நிலக்கோட்டை முகவரியில்பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான், அந்த நேரத்தில் எனக்கான அனைத்து முகவரியும் பொட்டிசெட்டிபட்டி முகவரியில் இருந்தது.

22. இவ்வழக்கு தாக்கல் செய்தபின்னர் நீதிமன்றத்தில் இருந்து நீதிமன்ற ஆணையர் வந்தாரா என்றால் வந்தார். நீதிமன்ற ஆணையர் ஸ்தலத்திற்கு தாவா பாதையின் வழியாக வந்தார் என்றால் சரிதான், அந்த தாவா பாதை முழுமையாக எனக்கு பாத்தியப்பட்டது.

23. சர்வே எண்.294 க்கு வடக்குபக்கம் வாதியின் வீடு மற்றும் இதர சொத்துக்கள் உள்ளன என்றால் சரிதான், ஆனால் மேற்படி வீடும் மற்றும் இதர சொத்துக்களும் பொதுப்பாதைக்கு வடக்கே உள்ளது. 4 செண்டை பொறுத்து பெரியசாமிபிள்ளை எனக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். மேற்படி கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

24. சர்வே எண்.294 க்கு தெற்குபக்கம் சர்வே எண்.299 க்கு கட்டுப்பட்ட குளமும், குளக்கரையும் உள்ளது என்றால் சரிதான்.

25. நீதிமன்ற ஆணையர் ஸ்தலத்தை பார்வையிட வரும்போது குறிப்பாணை கொடுத்தோமா என்றால் நீதிமன்ற ஆணையரிடம் வரைபடம், பட்டா, சிட்டா கொடுத்தோம், பத்திரங்களை காட்டினோம், கிராம புல வரைபடத்தை காட்டினோம். ஆனால் நீதிமன்ற ஆணையர் பெற்றுக்கொள்ளவில்லை என்பதால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று எனது வழக்கறிஞர் கூறினார்.

26. நீதிமன்ற ஆணையர் ஸ்தலத்தை பார்வையிடும்போது அவரிடம் வாக்குவாதம் செய்தோம் என்றால் சரியல்ல, எனது வழக்கறிஞர் பேசினார்.

27. இன்றைய தேதி வரை வாதியும், வாதியை சேர்ந்தவர்களும், நான்கு சக்கர வாகனத்தின் மூலமாகவும், இருசக்கர வாகனத்தின் மூலமாகவும் சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல, நான் பார்த்ததில்லை. நாங்கள் இல்லாத நேரத்தில் போகலாம்.

28. வாதியின் விவசாய நிலங்களில் விளையக்கூடிய விளைபொருட்களை தாவா பாதையின் வழியாக தான் சந்தைக்கு எடுத்துசெல்கிறார்கள் என்றால் சண்டை போட்டு வீம்புக்கு தாவா பாதையின் வழியாக சென்று வருகிறார்கள். அவர்களுக்கு ஆவணங்கள் எதுவும் இல்லை.

29. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தாவா பாதையை உறுதிசெய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், ஆனால் எனக்கு சொந்தமான இடம். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணையில் வாதிக்கு மாற்றுப்பாதை உள்ளதென நான் சொல்லவில்லை என்றால் சரிதான், வழக்கறிஞர் தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

30. வாதி தாவா பாதையில் வராமல் இருப்பதற்கு நான் என்ன நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ய எனது வழக்கறிஞரிடம் கூறியுள்ளேன்.

31. வாதி தாவா பாதையில் செல்லும்போது முள்ளை வெட்டி போட்டோன் என்றாலும், உடைந்த கண்ணாடி துண்டுகளை போட்டேன் என்றாலும், வாகனம் தாவா பாதையில் செல்லும்போது மறித்து பாதையில் உட்கார்ந்தோம் என்றாலும் அதற்குரிய ஆவணங்கள் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல, பக்கத்தில் உள்ள ஒயின்ஷாப்பில் குடித்துவிட்டு பாட்டிலை உடைத்துபோட்டுவிட்டு செல்கிறார்கள்.

32. வாதி தாவா பாதையை பயன்படுத்த விடக்கூடாது என்று நான் இடைஞ்சல் செய்தது சம்பந்தமாக 2021ம் ஆண்டிலிருந்து இன்று வரை வாதி தரப்பில் என் மீது

காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. இடத்தை அளக்கும்போது கொடுத்தார்கள்.

33. எனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.294 க்கு கட்டுப்பட்ட இடத்திற்கு சர்வே எண்.294 க்கு மேற்கே பாதை போட்டுள்ளேன், அதன் வழியாக சென்றுவருவேன்.

34. சர்வே எண்.294 வழியாக வாதி செல்லமுடியாது என்பதற்கும், பாதை இல்லை என்பதற்கும் ஆவணங்கள் எதுவும் குறிப்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

35. சர்வே எண்.294 ன் முன்பாத்தியஸ்தர்கள் வாதி தாவா பாதையை பயன்படுத்திவருவதை இடைஞ்சல் செய்ததில்லை என்றால் எனக்கு தெரியாது, நான் நிலம் வாங்கியபின்பு வாதி பயன்படுத்துவதை நான் அனுமதிக்கவில்லை. ஒருவேளை வாதி பயன்படுத்துவதை முன்பாத்தியஸ்தர்கள் தடுத்திருந்தால் அவர்கள் மீது வாதி வழக்கு தொடுத்திருப்பார் என்றால் எனக்கு தெரியாது.

36. 2005 க்கு முன்பாக பாதை பாத்தியத்தை குறிப்பதற்கு மாமூல் வழிநடை பாதை பாத்தியம் என்று குறிப்பிடுவார்கள் என்றால் அதுவழக்கம் இல்லை.

37. கரவன்ராயன்செட்டியாரிடமிருந்து செளந்தரபாண்டியநாடார் கிரையம் வாங்கிய ஆவணத்தில் மாமூல் வழிநடைபாதை பாத்தியம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

38. மாமூல் வழிநடைபாதை பாத்தியம் என்றால் மக்களும், வண்டி வாகனங்களும் சென்று வருவதை குறிக்கும் என்றால் சரியல்ல.

39. நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர் வழக்குரையில் காணப்பாடி கிராமத்தில் வாதிக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு செல்வதற்கு மாற்றுப்பாதை உள்ளதென்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

40. பி.வா.சா.ஆ.5 என்பது வாதிக்கு பாத்தியப்பட்ட நிலம் சம்பந்தமான ஆவணம் என்றால் சரிதான்.

41. பி.வா.சா.ஆ.4 என்பது வடமதுரை கிராமத்திற்கு கட்டுப்பட்ட பாதை

குறிப்பதற்கான ஆவணம் என்றால் சரிதான்.

42. மாற்றுப்பாதை வழியாக சர்வே எண்.294க்கு நான் எப்போதாவது சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன், போர் போடுவதற்கும், வயக்காட்டிற்கு JCP வாகனத்தை எடுத்துசெல்வதற்கும் பயன்படுத்தியுள்ளேன்.

43. பி.வா.சா.ஆ.6ல் சம்பந்தப்பட்ட வருவாய்துறை அதிகாரியின் கையெழுத்தோ, அலுவலக முத்திரையோ இல்லைஎன்றால் சரிதான், ஆனால் அது ஆன்லைன் மூலம் பெறக்கூடிய ஆவணம் என்றும் அதை பயன்படுத்தலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

44. பி.வா.சா.ஆ.7ல் வாதியின் பெயர்களை தனித்தனியான காண்பித்து வீடு, விவசாய நிலம் என்று தனியாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதை எங்கள் வழக்கை நிரூபிப்பதற்கு நாங்கள் தான் காட்டினோம்.

45. பி.வா.சா.ஆ.7 எங்கள் விருப்பத்திற்கு நாங்களே காட்டியுள்ளோம் என்பதால் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

46. 2021 -2026ம் ஆண்டு வரை வடமதுரை காவல் நிலையத்தில் என்மீது கொடுக்கப்ட்ட புகார் மனு மீதான விசாரணையில் நான் நேரில் ஆஜராகி தாவா பாதையை வாதி பயன்படுத்துவதை நான் இடைஞ்சல் செய்யமாட்டேன் என்று எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான், நாங்கள் போலீசார் கேட்கவில்லை, வாதி தரப்பில் சொல்வதை தான் கேட்டு எழுதிவாங்கினார்கள்.

47. 12.07.2025ம் தேதியில் வட்டாட்சியரின் அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு என் மனைவி அமிர்தம் பேரில் தாவா இடத்தை அளக்கபோவதாக பதிவு தபால் அனுப்பினேன் என்றால் சரிதான். மேற்படி விவரம் தெரிந்து வருவாய்துறை அதிகாரிகள் என்னை கண்டித்தார்கள் என்றால் சரியல்ல.

48. என்னுடைய கூடுதல் எதிர்வழக்குரையின் 5வது பாராவில் நான் விவசாயம் செய்யாமல் இருக்கும்போது மேற்படி நிலத்தில் யார் சென்றுவந்தாலும் தடுப்பதுகிடையாது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாதை உள்ளது என்றும் அதை வாதி பயன்படுத்திவருகிறார் என்பதை மறைமுக

ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிபற்றி தெரியாது.

49. வழக்கின் முழுவிவரம் முழுமையாக எனக்கு தெரியும் என்றாலும், சம்பவ இடத்தில் என்ன நடந்துவருகிறது என்று எனக்கு நன்கு தெரியும் என்றாலும், வழக்கை திசை திருப்புவதற்காக எனக்கு தெரியாது என்று எல்லா கேள்விகளுக்கும் பதிலளிக்கிறேன் என்றால் சரியல்ல.

50. வாதிக்கு 3 தலைமுறைகளாக பாத்தியப்பட்ட தாவா பாதை ஆவணத்தின் மூலமும், அனுபவத்தின் மூலமும் பாத்தியப்பட்ட பாதையை வாதி பயன்படுத்துவதை தடுப்பதற்கும், மறிப்பதற்கும் எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. அதனால் வாதிக்கு பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**